Emperor Journal of Classical Tamil Studies
ISSN: 2582-2977
www.ejcts.mayas.info
DOI-http://dx.doi.org/10.35338/EJCTS.2019.1205
© மாயாஸ் பதிப்பகம்

EJCTS
www.ejcts.mayas.info

Volume- I Issue- 1 January - 2022

# அத்தியாயம் - 12

## அ.ரெங்கசாமியின் ‘புதியதோர் உலகம்’ நாவலின் சமூகப்பார்வை

*குணநாதன்ஆறுமுகம்*
*மலேசியா*

## *முன்னுரை*

மலேசியாவில் தமிழ் இலக்கியம் வேர்விட்டு சுமார் இருநூறு ஆண்டுகள் ஆகிவிட்டன. தொடக்கக்காலத்தில் மலாயாவிற்கு வந்த தமிழ்கற்ற தமிழகத் தொழிலாளர்கள் கவிதைகள் படைத்தனர். பின்னர் தமிழ் ஏடுகளை நடத்தியவர்கள் இலக்கியப்பணியைத் தொடர்ந்தனர். ஆனாலும் பெரும்பகுதி எழுத்துகள் அவர்களது தாய் நாடான இந்தியாவை நோக்கியதாகவே இருந்தது. இந்நிலையில் மலாயா விடுதலைக்குப்பின் (1957) உள்நாட்டு எழுத்தாளர்களின் பார்வைமாறத் தொடங்கியது எனலாம். மலாயா வாழ்மக்களின் சிக்கல்களை மையமிட்டு அவர்கள் எழுதத்தொடங்கினர். அவ்வகையில் இன்று மலேசியாவின் மூத்த எழுத்தாளராக விளங்கும் அ.ரெங்கசாமி அவர்கள் தமிழ்நாவல் துறையில் ஆழமாகத் தடம்பதித்தவர். அவர் எழுதிய புதியதோர் உலகம் எனும் வரலாற்று நாவலின் சமூகப்பார்வையைப் பற்றி ஆராய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

## நாவல் அறிமுகம்

எழுத்தாளர் அ.ரெங்கசாமி அவர்கள் மலேசியாவில் கோலாலங்காட் மாவட்டத்தில் தெலுக்பங்ளிமாகாராங் எனும் இடத்தில் வசித்துவருகிறார். தமிழ்ப்பள்ளிகளில் தலைமையாசிரியராகப் பணியாற்றி ஓய்வுபெற்றவர். 1993இல் ‘மயில்’ வாரஇதழில் அவர் எழுதிய இந்தத்தொடர்கதை தான் நாவலாக

வெளிவந்துள்ளது. இரண்டாம் உலகப்போர் (1939-1945) நடைபெற்றபோது, 1941இல் ஜப்பானியர் மலாயாவைக் கைப்பற்றினர். சுமார் மூன்றரை ஆண்டுகள் அவர்களின் கொடுங்கோல் ஆட்சிநிலவியது. நாட்டுமக்கள் பெரும்துன்பத்தில் சிக்கித்தவித்தனர். அதிலும் இந்தியாவிலிருந்து பிழைக்கவந்தத் தொழிலாளர்களின் நிலையோ பரிதாபம் ஐரோப்பிய முதலாளிகள் ஓட்டமெடுத்தபின் நிர்க்கதியாய் நின்ற தோட்டத் தொழிலாளர்களின் சிக்கலை மையப்படுத்தி இந்நாவலின் கதை நகர்கிறது.

தொழிலாளர்கள் எதிர்நோக்கிய உணவு, உடை, மருத்துவம், பாலியல் தொல்லை என அனைத்தையும் எழுத்தாளர் அ.ரெங்கசாமி தனக்கே உரித்தான நடையில் கதையைக் கொண்டு சென்றுள்ளார்.

## சமூகவியல்பார்வை

இந்தநாவலில் சமூகப்பின்னணியைக் கதைமாந்தர்வழி பார்க்கலாம். ஆள்வோர் சமுதாயமாக ஆங்கிலேய நிர்வாகி, தமிழ்குமாஸ்தா, கங்காணிகள் என்று சொல்லப்படும் தமிழ்க் கண்காணிப்பாளர்கள், ஜப்பானிய இராணுவத்தினர், ஜப்பான்மொழியைக்கற்ற ‘குருத்தோ‘ என்று அழைக்கப்படும் தமிழ் உதவியாளர்கள் ஆகியோர். ஆளப்படுவோர் என்று பார்த்தால் பட்டியல் நீள்கிறது. தோட்டத் தொழிலாளர்கள் அனைவரும் ஆளப்படுவோரே!

“இந்த ஊரு ஜப்பான் ஆளுபிடிச்சாச்சு . துரை எல்லாம் இங்கே இருக்க முடியாது. நல்லகாரியம் சின்னதுரை போனமாசம் ஊருக்குப்போயிடுச்சு. அதுக்குக்கஷ்டம். பெரியதுரை - மேமு - புள்ளை எல்லாம் ரொம்பக் கஷ்டம் வந்தாச்சு - நீ எல்லாம் இனிமே வேலை செஞ்சா சம்பளம் கிடைக்காது .இப்ப இந்தப்பால் எல்லாம் ரோட்டுலே ஊத்துது“ (பக்கம் 11-12)

மலாயாவை ஜப்பானியர் கைப்பற்றியவுடன் ரப்பர்பால் போன்றவை அவர்களின் கைகளில் கிடைக்கக்கூடாது என்ற எண்ணத்தில் ஆங்கிலேய நிர்வாகிபோட்ட உத்தரவை , தோட்டத் தொழிலாளர்கள் அப்படியே நிறைவேற்றினர். அதுமட்டுமா? ஜப்பானியர்கள் தாய்லாந்து - பர்மாவில் அமைத்த இரயில்பாதைக்கு வேலை செய்யத் தோட்டத்தொழிலாளர்களை அடித்து ஆடுமாடுகளைப்போல் இழுத்துச் சென்றகாட்சிகளையும் ஆசிரியர் உணர்ச்சிப்பூர்வமாகக் காட்டியுள்ளார். கருப்பையா கங்காணியை ரயில்பாதை அமைக்க ஜப்பானியர் இழுத்துச் செல்லும்போது ஜப்பானியர்களுக்கு ஆதரவாகப் பேசும் குமாஸ்தா மற்றும் தமிழ் உதவியாளன் இருக்கின்றனர். எல்லாக்காலங்களிலும் குரலற்ற சமூகமாகப் பார்க்கப்படுவோர் தொழிலாளர்கள் தாம்!

## வாழ்விடச்சிக்கல்

ரப்பர்தோட்டத்தில் வேலை இல்லை என்ற நிலையில், தொழிலாளர்கள் அருகிலிருந்த புறம்போக்குநிலங்களில் மரவள்ளிக்கிழங்கு, காய்கறிகள்பயிரிட்டும்கோழி, ஆடுமாடுவளர்த்தும், ஆற்றில் மீன்பிடித்தும் வாழ்க்கையை ஓட்டினர். பெயருக்குத்தான் தோட்டப்புற வீடுகள் இருந்தன .ஆனால் அங்கே பிழைக்கவழியில்லை. அருகிலிருந்த புறம்போக்கு நிலங்களில் தற்காலிகமாகக் குடிசைகள் அமைத்துக் கொண்ட நிலையை இந்தநாவலில் காணலாம். கருப்பையாகங்காணி அங்கிருந்த படகுத்துறைக்குப் பக்கத்தில் செட்டியாரின் நிலத்தில் அனுமதிபெற்று கேப்பை, சோளம் ,மரவள்ளிக்கிழங்கு, சர்க்கரைவள்ளிக்கிழங்கு பயிரிட்டார். (பக்கம் 88)

## மருத்துவவசதியின்மை

போர்க்காலங்களில் மக்களுக்கு மருத்துவவசதி கிடைப்பது கேள்விக்குறியே! இந்த நாவலில் மருத்துவவசதி இல்லாமல் கைவைத்தியம் மற்றும் நாட்டுவைத்தியம் பற்றிய செய்தியெல்லாம் உள்ளது. சரசு என்பவளுக்கு அஞ்சலைபாட்டி பிரசவம்பார்த்து வெற்றிகரமாக முடிக்கிறாள் (பக்கம்85) “பயப்படாதீங்கய்யா, இந்தப்பச்சிலைமருந்து இந்தமாதிரி வீக்கத்துக்குக் கைகண்டமருந்துன்னு தெரிஞ்சவங்களுக்குத்தான் தெரியும்; இன்னும் இரண்டேவேளை, ஐயா எழுந்து நடக்கப் போறீங்கபாருங்க“ (பக்கம் 175) இவ்வாறு பச்சிலை வைத்தியம் பார்ப்பவர் கருப்பையாகங்காணி என்று இந்தநாவலில் பல இடங்களில் ஆசிரியர் கோடிட்டுக்காட்டியுள்ளார்.

## உணவுப்பஞ்சம்மற்றும்உடைக்கும்பஞ்சம்

இந்தப் போரின் போது மக்கள் எதிர்நோக்கிய பெரும்சிக்கல் உணவுதான். உணவுக்கு அல்லல்பட்ட தோட்டத்தொழிலாளர்கள் பற்றி நாவல் முழுவதும் உள்ளது. இந்தப்போராட்டக்காலத்திலும் தொழிலாளர்கள் தீபாவளியைக் கொண்டாட மறக்கவில்லை. மரவள்ளிக்கிழங்கும் இறைச்சியும் கருப்பையாகங்காணி வீட்டில் தாராளமாக விருந்தாகப்படைக்கப்பட்டது. (பக்கம் 180) மேலும் பலர் உடுத்த உடையின்றி, கோணிப்பை/சாக்குகளை அணிந்திருந்தனர். இதற்குப் பெண்களும் விதிவிலக்கல்ல என்பதுதான் கொடுமையின் உச்சம்!

## சயாம் - பர்மாமரணரயில்பாதை

ஜப்பானியர்கள் முன்புசொன்ன இந்தரயில்பாதை அமைப்புக்கு ஆயிரக்கணக்கில் மலாயா இந்தியர்களையும், போர்க்காலக்கைதிகளையும் இழுத்துச் சென்றது தனிவரலாறு. அவ்வாறு சென்றவர்களுள் பலர்மாண்டனர்.

இந்தநாவலில் அவ்வாறு இழுத்துச் சென்று, ஒருகையை இழந்து திரும்பும் ஓடும்பிள்ளை, மொத்தத்துயரங்களுக்கும் ஒரு சாட்சி!

## விடுதலைச்சிந்தனை

இந்தப்போரின்போது தான் இந்தியவிடுதலைக்கு நேதாஜிசுபாஷ்சந்திரபோஸ் இந்திய தேசிய இராணுவம் அமைத்து பர்மா வழியாக வீரர்களை அழைத்துச்சென்றார். அந்தப்படையில் ஒயிலாட்டக்காரர் நல்லதம்பியும் செல்வதாகக்கதை அமைக்கப்பட்டுள்ளது. இந்தியாவின் விடுதலைக்கு அனைவரும் போராட வேண்டும் என்ற உந்துதல் அன்றைய மலாயாவில் இருந்ததை ஆசிரியர் கதையினூடே சுட்டிக்காட்டுகிறார்.

## பாலியல்தொல்லை

விமானத்திடல் அமைக்கும் வேலைக்கு வரும் இளம் தமிழ்ப் பெண்ணொருத்திக்கு ஜப்பானியன் ஒரு வன்பாலியல் தொல்லை கொடுக்கிறான். அவனைக்காத்தான் தாக்கி அந்தப்பெண்ணை மீட்கிறான்.
(பக்கம் 241) இதைப்போல பலசம்பவங்கள் நாடுமுழுவதும் நடந்திருக்கும் என்றுபடிக்கும் வாசகர்கள் யூகித்திருப்பர்!

## கலையைப்போற்றுதல்

நாவலில் வரும் ஒயிலாட்டக்காரர் நல்லதம்பி, ஆங்கிலேயருக்கு எதிராகப்பேசக்கூடியவர். ஆதலால் அவர் தோட்டத்திற்குள் நுழைய நிர்வாகம் தடைபோடுகிறது. இவர் தான்கற்ற ஒயிலாட்டத்தை இந்தத் தீபாவளிக்குக் காட்டமுடியவில்லையே எனமனம் நொந்து கொள்கிறார். தமிழர்கள் தங்களின் பண்பாட்டைப் போற்றிவருகின்றனர் என்பதனை ஆசிரியர் இந்தநாவலில் பதிவுசெய்துள்ளார்.

## முடிவுரை

'புதியதோர் உலகம்' நாவலில் மலாயா வாழ்மக்கள் அதிலும் குறிப்பாகத் தோட்டத்தொழிலாளர்கள் பட்டதுயரங்களை எழுத்தாளர் அ.ரெங்கசாமி சிறப்பாகப்பதிவு செய்துள்ளார். இரண்டாம் உலகப்போரின் போது தனக்கு ஏற்பட்ட அனுபவங்களையே அவர்கதையாக்கியுள்ளார். தொழிலாளர்களின் துயரங்களை ஒரு வரலாற்றுப்பதிவாகச் செய்துள்ள எழுத்தாளர் கோலாலங்காட் அ.ரெங்கசாமி என்றும் நினைவில் நிற்பவர் என்றால் மிகையாகாது!